# பணம்

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 59-11-23 இந்த மலையைப் பார்த்துப் பேசு

112. அங்கே மேலே புதிய சபையை, அந்தக் கூடாரத்தைக் கட்டுவதைக் குறித்து நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம், திரு. ரைட் அவர்கள் என்னிடம், 'கூடாரத்தைக் கட்டுவதற்கு எவ்வளவு பணம் கொடுப் பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்?' என்று கேட்டார்.

நான், 'சகோதரன் ரைட் அவர்களே, அதை அறிவதற்கு போதுமான அளவு நான் அங்கே இருப்பதில்லை' என்றேன்.

113. 'என்னவென்று உமக்குத் தெரியுமா? ஹாட்டி சபைக்குக் 50 டாலர்கள் கொடுக் கும்படியாக வாக்குறுதி கொடுக்க விரும்பி னாள், சபையின் தர்மகர்த்தாவாகிய சகோதரன் ராபர்ஸன் (அவர் அவர்களில்

ஒருவராகவும் தலைவராகவும் இருக்கிறார்), அவள் அதைக் கொடுக்க அனுமதிக்கவில்லை. காரணம் என்னவென்றால், அங்கே மலைகளிலிருந்து 50 டாலர்கள் சம்பாதிக்க அவளுக்கு ஏறக் குறைய 6 மாதங்கள் பிடிக்கும். ஆனால் அவள் இருபது டாலர்கள் கொடுத்தாள், சகோதரன் பிரன்ஹாமே, அவள் விரும்புகிறாள்...' என்றார்.

114. நான், 'என்னவென்று உமக்குத் தெரியுமா? நான்-நான் இங்கே என்னுடைய பாக்கெட்டில் 20 டாலர்கள் வைத்திருக்கிறேன். கொஞ்சம் முட்டைகளை வாங்கும்படி மேடா அதை எனக்குக் கொடுத்திருக்கிறாள்' என்று நினைத்தேன். 'நான் திரும்பிப் போவதற்கு முன்பு அந்த 20 டாலர்களை அவளுக்குக் கொடுத்து விடுவேன்... அவள் இங்கிருந்து தூரத்தில் இருக்கிறாள், உனக்கு ஒருபோதும் அது தெரியாது. எனவே நான்-நான் அவளுக்கு

குளிர்சாதனப் பெட்டிகளையும் மற்றும் காரியங்களையும் வாங்கியிருந்தேன், ஏனென்றால் நான் அங்கே மேலேயிருந்த அவளுக்காக மிகவும் வருந்தினேன், அந்தச் சிறு தாய் தூரத்திலிருந்த மலையில் வேலை செய்ய முயற்சித்துக் கொண்டிருக் கிறாள்' என்றேன். எனவே நான், 'நான் அப்படியே இந்த - இந்த 20 டாலர்களை அவளுக்குக் கொடுத்து விடுவேன், நான் அப்படியே செய்வேன். நான் இங்கிருந்து புறப்படும் போது, நான் அப்படியே இதைக் கொடுத்து விடுவேன், எனவே அதை அவள் பெற்றுக் கொள்வாள், அது மேலேயிருக்கிற சபையில் அவள் செலுத்தின அவளுடைய 20 டாலர்கள்' என்று நினைத்தேன். எனவே நான், 'நான் அப்படியே அதை அவளுக்குக் கொடுத்து விடுவேன்' என்று நினைத்தேன்.

அவ்வாறு நான் சொன்ன போது... ஏதோவொன்று என்னிடம், "ஆனால்

உன்னுடைய கர்த்தர் ஒருநாள் ஒரு-ஒரு சுவரின் பக்கத்தில் நின்று கொண்டு, ஐசுவரியவான்கள் ஒரு பொக்கிஷ சாலைக்குள் ஆயிரக்கணக்கான டாலர்கள் பணத்தைப் போடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு சிறிய விதவை அருகில் வந்தாள், அவளிடம் மூன்று பென்னி காசுகள் மாத்திரமே இருந்தது, அது அவளுடைய எல்லா ஜீவனத்துக் கானது. இப்பொழுது, நீ அங்கே நின்றிருந் தால், நீ என்ன செய்திருப்பாய்? அந்த சிறு விதவை அந்த மூன்று பென்னி காசுகளை போடுவதை நீ கண்டு, ஓடிச் சென்று, ‘ஓ வேண்டாம், சகோதரியே, அதைச் செய்யாதே, அதைச் செய்ய வேண்டாம், ஏனென்றால் இங்கே எங்களிடம் நிறைய (பணம்) உள்ளது; எங்களுக்கு அது தேவையில்லை’ என்று கூறியிருப்பாய். ஆனால் இயேசு அதைச் செய்யாதே என்று ஒருபோதும் அவளிடம் கூறவில்லை.

அவள் முன்னே சென்று அதைத் செய்ய அவர் அனுமதித்தார். ஏனென்றால் கீழே பாதையில் அவளுக்காக ஏதோவொன்று இருந்தது என்பதை அவர் அறிந்திருந்தார். (பாருங்கள்?), ஏதோ கொஞ்சம் மேலானது அங்கே இருந்தது' என்றது. நீங்கள் பாருங்கள்? எனவே அவர் அவளை அனுமதித்தார். உற்சாகமாய்க் கொடுக்கிற வனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

எனவே நான், 'நல்லது, நான் அப்படி யானால் என்னுடைய பணத்தை என்னு டைய பாக்கெட்டிலேயே வைத்திருப்பேன், (பாருங்கள்?) அப்படியானால் அதெல் லாம் சரியே; நான் அப்படியே அவள் அதைச் செய்ய விட்டு விடுகிறேன், ஏனென்றால் கர்த்தர் ஒருக்கால்...' என்றேன்.

இந்நிலையில் வழக்கமாக தேவனுடைய காப்புக் கவசத்தைவிட்டு ஊழியக்காரர்களை அகற்றிப்போடுவதற்கான அவர்களின் ஒரு பலவீனம் பணமே என்பதை நான் எப்போதுமே அறிந்திருந்தேன். எனவே “பண ஆசையே எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது.”



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: உம்முடைய வார்த்தையின்படியே, 53-0608E

3. இப்பொழுதும், சென்ற இரவில், அல்லது இன்னும் சரியாகச் சொன்னால், நேற்று பிற்பகலில், அல்லது அது சென்ற இரவில், அவர்கள் இங்கே இந்தக் கூட்டத்தில், எனக்காக ஒரு அன்பின் காணிக்கையை எடுத்தார்கள். நான் உங்களுக்கு நன்றிசெலுத்த விரும்புகிறேன். நீங்கள் அதை எனக்கு கொடுக்க நான் தகுதியற்றவன். அவர்கள் சென்ற இரவில் என்னிடம் கொண்டுவந்து, “இதோ உங்களுக்கான அன்பின் காணிக்கை” என்று கூறும்வரையில் நான் அதைக்குறித்து சிந்தித்துப்பார்க்கவில்லை. ஏன், நான் அதற்காக மிகவும் சந்தோஷப்பட்டேன்.

கிறிஸ்தவ நண்பரே, அதைவைத்து என்ன செய்யவேண்டுமென்று, எனக்குத் தெரிந்த வரையில், அதின் ஒவ்வொரு காசையும், தேவனுடைய மகிமைக்காகவே செலவழிப்

பேன். பணத்தைக்கொண்டு நான் என்ன செய்கிறேன் என்று ஆராய்ந்து கண்டறிய யாரும் எவ்வளவு வரவேற்க முடியுமோ அவ்வளவு வரவேற்கப்படுகிறார்கள். எனது குடும்பத்திற்காக நான் வைத்திருக்கும்படி கட்டாயத் தேவையாக இல்லாத, மற்றும் எனது செலவினம் மற்றும் காரியங்களுக்காக நான் வைத்திருக்க அவசியமானதாக இல்லாத ஒவ்வொரு காசும் நேரடியாக மிஷனரி வேலைக்குத்தான் போகிறது. நானே உலகத் தின் மற்ற பாகங்களுக்கு சுவிசேஷத்தைக் கொண்டுசெல்கிறேன், அப்படியானால் அது என்னவென்று எனக்குத் தெரியும்.

4. நான் ஒருபோதும் என்னுடைய ஜீவியத்தில் காணிக்கை எடுத்ததே கிடையாது. என்னால் அதை ஒருபோதும் செய்ய முடிய வில்லை. ஒருசமயம் எனக்கு நினைவிருக் கிறது... சபையிலிருந்து வந்திருக்கும் என்னு டைய ஜனங்களில் சிலர் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இங்கே சமீபத்தில், அவர்கள்... என்ற ஒரு நிலைக்கு உள்ளானது எனக்கு ஞாபகமிருக்கிறது. நீங்கள் எப்பொழு

தாவது தேவைகளுக்கு போதுமான அளவு பணம் வைத்திருக்க முடியாத ஒரு நிலைக் குள்ளாகியிருக்கிறீர்களா? நான்-நான் அங்கே என்னுடைய கூடாரத்தில் பன்னிரண்டு வருடங்களாக ஒரு காசும் இல்லாமல் பிரசங்கம் பண்ணினேன். நான் ஒருசில வருடங்களாக இந்தியானா மாகாணத்தில், இங்கிருக்கும் இந்த மாவட்டத்தில் கூட, மாநில வேட்டை விலங்குகள் மற்றும் வேட்டையாடுதலை கண்காணிக்கும் அதிகாரி யாக (State Game Warden) இருந்தேன். உயர்மின்னழுத்த மின்சாரத்தைக் கொண்டு செல்லும் மின்கம்பிகளிலும், அதைப்போன்ற மற்றவைகளிலும் ரோந்துசென்று, உழைத்து, எனக்குப் போதுமான பணத்தைச் சம்பாதித் தேன்... எனக்கு அவசியமில்லாதிருந்தது. “நான் ஒரு மனிதனாக, வாலிபனாக இருந்து, என்னால் வேலைசெய்யவும் முடிகிறதென் றால், நான் ஏன் வேலைசெய்யக்கூடாது” என்று நான் எப்போதுமே எண்ணியதுண்டு. அதன்பிறகு பிரதான வேலையோடு கூட பிரசங்கமும் பண்ணினேன்.

5. ஏறக்குறைய வாரத்தின் ஒவ்வொரு இரவிலும், என்னுடைய சீருடையை அணிந்து கொண்டு உயர்மின்னழுத்த மின்சாரத்தைக் கொண்டுசெல்லும் மின்கம்பிகள் நெடுகிலும் நடந்துகொண்டிருப்பேன். யாராவது மனந்திரும்புவதை கண்டால், அவர்களை கீழே ஓடைக்கு அழைத்துச்சென்று அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்துவிட்டு ஈரமான உடையோடு திரும்பவும் தொடர்ந்து போய்க்கொண்டிருப்பேன். அது சரியே. கர்த்தரைக்குறித்துப் - (கர்த்தரைப்) பற்றி பேசுவதை, வெளியே வயலில் இருக்கும் விவசாயிகளும் மற்றும் எல்லாரும் (everything) பார்த்து, அவர்கள் அழத் தொடங்கி, தங்கள் இருதயத்தை தேவனுக்குக் கொடுப்பார்கள், அப்பொழுது நான் அவர்களை அழைத்துக்கொண்டு, வைக்கோலினால் செய்யப்பட்ட விறைப்பான அந்தத் தொப்பியை இழுத்து எடுத்துவிட்டு, நாங்கள் கீழே ஓடைக்கு இறங்கிச்சென்று சரியாக அங்கேயே அதைத் தீர்த்துவைத்து விட்டு, களிகூர்ந்தபடியே எங்கள் பாதையில் போய்க்கொண்டிருப்போம். நான்

பனிக்கட்டியை உடைக்கவேண்டியிருந்த போதும் அதைச் செய்திருக்கிறேன் (ஞானஸ் நானம் கொடுத்திருக்கிறேன் - மொழிபெயர்ப் பாளர்). உள்ளேபோகும்போது, உடைகள் என்மேல் குளிரால் உறைந்துபோனாலும், அதி னால் என்னுடைய ஜீவியத்தில் ஒருபோதும் மோசமாக சளிப்பிடித்ததே கிடையாது.

இந்நிலையில் எனக்கு ஞாபகம் உள்ளது, ஒரு சமயம்... இப்பொழுது, என்னுடைய மனைவியும் கூட இங்கு உட்கார்ந்து கொண் டிருக்கிறாள், எனவே நான் அநேகமாக சபை ஆராதனைக்குப் பிறகு இதன் காரணமாக சொல்லுவதைக் கேட்பேன். இந்நிலையில் தேவைகளுக்கு போதுமான பணத்தை நாங்கள் கொண்டிருக்க இயலாத ஒரு நிலைக்கு உள்ளானோம், எனவே நான் அவளிடம், “நான் காணிக்கை எடுக்கப்போகி றேன்” என்று கூறினேன்.

அதற்கு அவள், “நான் உங்களைக் கவனிக்கப் போகிறேன்” என்றாள்.

எனவே நான் கூடாரத்திற்குப் போய், "என்னால் அதைச்செய்ய முடியாது என்று உனக்குத் தெரியுமா?" என்றேன்.

6. இப்பொழுது, அவர்கள் காணிக்கை தரமாட்டார்கள் என்ற காரணத்தினால் அல்ல, அந்த அன்பான ஜனங்கள் எனக்காக தங்கள் கரத்தையும் வெட்டிஎடுத்துவிட விருப்ப முள்ளவர்களாய் இருப்பார்கள். ஆனால் அவர்கள் அதைச் செய்ய நான் விரும்ப வில்லை. இந்நிலையில் வழக்கமாக தேவ னுடைய காப்புக் கவசத்தைவிட்டு ஊழியக் காரர்களை அகற்றிப்போடுவதற்கான அவர் களின் ஒரு பலவீனம் பணமே என்பதை நான் எப்போதுமே அறிந்திருந்தேன். எனவே "பண ஆசையே எல்லா தீமைக்கும் வேரா யிருக்கிறது." ஆகவே நாங்கள் இங்கே வந்திருக்கிறோம், பிரன்ஹாம்கள் எல்லாருமே எவ்வளவு கூடுமோ அவ்வளவு நாடோடிக ளாகவும் ஏழைகளாகவும் தான் இருக்கிறார் கள். அந்த மற்றவர்களைப் போலவே நானும் இருக்க விரும்புகிறேன்.

இங்கே சிறிது காலத்திற்கு முன்பு, way out கலிபோர்னியாவிலுள்ள ஒரு மனிதர் எனக்கு ஒரு காடிலாக் காரை (காடிலாக் கார் என்பது மிகவும் விலையுயர்ந்த வசதியான காராகும் - மொழிபெயர்ப்பாளர்) தரப்போவதாக இருந்தார். அவருடைய மனைவி புற்றுநோயிலிருந்து சுகமடைந்திருந்தாள், அவர், “நல்லது, சகோதரன் பிரன்ஹாமே, நாங்கள் அவாக் அவர்களுக்கு ஒரு காடிலாக் காரைக் கொடுக்கிறோம். நாங்கள் சென்று உமக்கும் ஒன்றை வாங்குகிறோம்” என்றார்.

அதற்கு நான், “சகோதரனே, உமக்கு நன்றி. என்னுடைய பழைய செவர்லே மோட்டார் வாகனம் (Chevrolet truck) இன்னும் மிக நல்ல தோற்றத்தில் தான் உள்ளது” என்றேன்.

அவர்கள் எனக்கு ஒரு போன்டியாக் காரைக் கொடுத்திருக்கிறார்கள், நான் அப்படியே தொடர்ந்து ஒவ்வொரு முறையும் அதைக் கொடுப்பதும் வேறொன்றை வாங்குவதுமாக இருக்கிறேன், எனவே அவர்கள்...

அவர், “நான்... நீர் ஒரு காடிலாக் காரை வைத்திருக்க நாங்கள் விரும்புகிறோம்” என்றார்.

7. அதற்கு நான், “இப்பொழுது நான் ஒரு பெரிய காடிலாக் காரில் ஆர்கன்ஸாஸினூடாக வந்துகொண்டிருந்தால், இங்கே என்னிடம் வருகிற எனது ஜனங்கள், அங்கே வெளியில் இருக்கும் சிறுவயது பெண்கள் மிகவும் சோர்வுற்றவர்களாகவும், முதுகு பிரச்சனை யோடும், பெண்களுக்கான கோளாறோடும், அந்த விளைநிலத்தினூடாக அவ்விதம் பருத்தியை (பஞ்சை - மொழிபெயர்ப்பாளர்) உள்ளடக்கிற ஒரு கோணிப்பையை இழுத்தபடி; ஏறக்குறைய ஐம்பது, நூறு பவுண்டுகள் எடையுள்ள பருத்தியை தங்களுக்கு பின்னே இழுத்தபடி; ஒருக்கால் காலை உணவிற்காக கொஞ்சம் தோலில்லாத உப்பிட்ட பன்றி இறைச்சியையோ (fat bacon) சோள ரொட்டியையோ வைத்தி ருந்து, ‘ஓ, சகோதரன் பிரன்ஹாம் அதோ ஒரு காடிலாக் காரில் போகிறார்’ என்று சொல்லும்போது, நான் நன்றாகக் காணப்பட

மாட்டேனே?” என்றேன். அது-அது எனக்குச் சரியாக தோன்றவில்லை.

இப்பொழுது, உங்களுக்கு ஒரு காடிலாக் கார் இருந்தால், அதெல்லாம் சரிதான், புரிகிறதா (பாருங்கள்), ஆனால் நான் அப்படியே என்னைக்குறித்து பேசிக்கொண்டிருக்கிறேன்.

நான் ஒரு கன்வென்சன் கூட்டத்திற்கு, “சுகமளித்தலின் சத்தம்” கன்வென்சன் கூட்டங்களில் ஒன்றுக்கு, போனது எனக்கு நினைவிருக்கிறது. நான் சற்றுநேரம் காரை நிறுத்தினேன். கார் வாங்குபவரின் தேவைக்கு ஏற்ப உருவாக்கப்பட்டிருந்த (custom built) ஒரு மகத்தான பெரிய பாக்கார்டு காரோடு (பாக்கார்டு என்பது அமெரிக்க சொகுசு மோட்டார் வாகன நிறுவனமாகும் - மொழிபெயர்ப்பாளர்) இதோ ஒரு மனிதர் அங்கே உட்கார்ந்துகொண்டிருந்தார். இங்கேயோ வேறொருவர் ஒரு லிங்கன் காரோடு (லிங்கன் என்பது அமெரிக்க மோட்டார் வாகன உற்பத்தியாளரான ஃபோர்டின் சொகுசு வாகன பிரிவாகும் - மொழிபெயர்ப்பாளர்) அமர்ந்துகொண்டிருந்

தார், நானோ ஒரு பழைய ’35 மாடல் செவர்லே காரை வைத்திருந்தேன். அது அந்தப் பெரிய கார்களுக்கு இடையே அந்தக் கார்களைப்போன்று இல்லாத காரணத்தினால், எல்லாரும் கவனிக்கும் ஒன்றைப்போன்று - அதைப்போன்று தோற்றமளிக்கவில்லையா. ஆனால் அவர்களைக் கொண்டுபோய் சேர்த்ததுபோன்றே, அது என்னையும் கூட அங்கே கொண்டுபோய் சேர்த்தது. அப்படியே அதேவிதமாகவே நானும் அங்கு போய்ச்சேர்ந்தேன்.

இந்தக் காணிக்கை எடுத்தது எனக்கு நினைவிருக்கிறது. நான் போய் வயோதிப சகோதரனாகிய ஒய்ஸ்ஹார்ட் அவர்களிடம், அவருடைய ஆத்துமா ஆசீர்வதிக்கப் படுவதாக, அங்கிருந்த வயதான டீக்கனாகிய அவர் இன்றிரவு மகிமையில் இருக்கிறார், அவர் வயதுமுதிர்ந்தவர், நான், “நான் காணிக்கை எடுக்கப்போகிறேன். நீர் (அதைச்) செய்ய விரும்புகிறேன். ... ஏதோ என்னிடம் உள்ளது” என்றேன்.

8. எல்லாரும் என்னைப் பார்க்கத் தொடங்கினார்கள். வயோதிப சகோதரன் ஒய்ஸ்ஹார்ட் அவர்கள், கூடாரத்திலுள்ள இங்கிருக்கும் உங்களில் அநேகருக்கு அவரை ஞாபகமிருக்கும். எனவே அவர் போனார்… நான், "என்னுடைய தொப்பியை வாங்கிக்கொண்டு, அதை ஒருவர் மற்றவருக்குக் கொடுக்க விரும்புகிறேன், இது… ஏதோவொன்றாக உள்ளது" என்றேன். அது வரிசையில் எல்லாரிடமும் சென்றது… அங்கே அருமையான வயதில் மூத்த ஸ்திரீ முன்னால் அமர்ந்திருந்தார்கள், அது அநேக வருடங்களுக்கு முன்பு, அது கஷ்டமாக காலமாக இருந்தது. ஒரு சிறு முன்றானை (மேலாடைக்கு) அடியில் நீங்கள் எடுத்துச்செல்லும் இந்தச் சிறு ஜேப்பிகளில் ஒன்றில், உங்களுக்குத் தெரியும், மேலாடைக்கு அடியிலிருக்கும் பாக்கெட்டில், அவர்கள் கீழ்நோக்கியபடி வைத்திருந்தார்கள் (got down). இவ்வாறாக அவர்கள் இந்தச்சிறு பணப்பையை வெளியே எடுத்தார்கள், அதன்மேல் ஒரு சிறு கொளுவிமாட்டியை (snap) வைத்திருந்தார்கள்.

அவர்கள் அதை அவிழ்த்து, சில சிறு அமெரிக்க நாணயங்களை பொறுக்கிஎடுக்கத் தொடங்கினார்கள். என்னே, அந்த வயதான ஏழை ஸ்திரீயின் பணத்தை என்னால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நான் என்னுடைய இருதயத்தில் வைத்து அதை உணரத் தொடங்கி, ஏறக்குறைய அவ்வளவு பெரும் நிலையை அடைந்து, “ஓ, நீங்கள் என்ன சொல்லுவீர்கள் என்று பார்க்க, நான் உங்களை சும்மா விகடம்பண்ணினேன்” என்றேன். என்னே, அவ்விதம் அங்கே வைத்துவிட்டு, “நான் அவ்வாறு எண்ணங் கொள்ளவில்லை” என்றேன்.

9. வயதான மனிதராகிய சகோதரன் ரையான்; அவர் இங்கு எங்கோ உட்கார்ந்து கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். நீங்கள் வழக்கமாக அவர் இங்கே அமர்ந் திருப்பதைக் காண்பதுண்டு. அவருக்கு நீளமான மயிரும் நீண்ட தாடியும் உண்டு. அவர் ஏறத்தாழ மிஷிகனிலிருந்து வருகிறார். அவர் அங்கே ஒரு பழைய மிதிவண்டியை ஓட்டிக்கொண்டுவந்து, அதை எனக்குக்

கொடுத்துவிட்டு, அதைத்திரும்ப வாங்க வில்லை, அது அவர்மேல் நழுவிவிழுந்து விட்டது. எனவே நான் அதை சற்று பழுதுபார்த்து, அதற்கு பெயின்ட் அடித்து, அதை எடுத்துச்சென்று ஐந்து டாலர்களுக்கு விற்றேன், (அதனால்) நான் காணிக்கை எடுக்க வேண்டியதாக இருக்கவில்லை. எனவே, நான்... எப்படியும், கர்த்தர் ஒரு வழியை ஏற்படுத்தினார், அவர் அவ்வாறு செய்யவில்லையா? எனவே அவர் ஒரு வழியை ஏற்படுத்துவார். நண்பர்களே, நான் இருதயத்தின் முழு உத்தமத்தோடும் உங்களுக்கு மிகவும் நன்றிசெலுத்துகிறேன். மிகவும் கனிவான கிறிஸ்தவ அன்போடு கூட, நான்-நான் உங்களுக்கு நன்றிசெலுத்துகிறேன். தேவனுடைய கிருபையால், நாம் அதோ அங்கே அந்த மகத்தான நாளில் சந்திக்கும் போது, என்னால் கூடுமான மிகச்சிறந்ததை நான் செய்துள்ளதைக் கண்டுகொள்வீர்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

---

**(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை.)**




தேவன் அவனை ஆசீர்வதித்து, அவனுக்கு வெறுமனே ஒரு சிறு ஊழியத்தைக் கொடுக்கும் போது, நீங்கள் அறியும் முதலாவது காரியம் என்னவென்றால், அவன் விழுந்து போகும் காரியங்களில் ஒன்று *பணமாகும்.*



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: **ஓர் நீதிமன்ற விசாரணை, ஏப்ரல் 12, 1964**

மேலும் இப்பொழுது, ஜனங்களாகிய உங்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். மேலாளரிடம் கேட்க எனக்கு ஒரு தருணமும் கிடைக்கவேயில்லை, ஆனால் எல்லா செலவு களும் காரியங்களும் சந்திக்கப்பட்டு விட்டன என்று நம்புகிறேன். நீங்கள் கொடுத்த ஒவ்வொரு காணிக்கையையும், ஒவ்வொன் றையும் நான்—நான் அதைப் பாராட்டுகிறேன். வழக்கமாக அவர்கள் காணிக்... எடுப்பார்கள். (அவர்கள் காணிக்கை எடுத்தார்களா?) நீங்கள் அவ்வாறு செய்ய வேண்டியதாய் இருக்கவில்லை. அவர்கள் கூறினார்கள்... எல்லாமும் செலுத்தப்பட்ட பிறகு அவர்கள் காணிக்கை கொடுத்ததாக அவர் கூறினார்.

உங்களுக்குத் தெரியும், நான்... இப்பொழுது, **33** வருடங்களாக பிரசங்க

பீடத்திற்குப் பின்னால் இருந்து வருகிறேன். நான் என்னுடைய ஜீவியத்தில் ஒருபோதும் காணிக்கை எடுத்ததே கிடையாது, ஒரு தடவையாகிலும், என்னுடைய சொந்த சபையிலும் கூட அவ்வாறு செய்ததில்லை, என்னுடைய ஜீவியத்தில் காணிக்கை எடுத்ததே இல்லை. ஜெபர்ஸன்வில்லிலுள்ள கூடாரத்தில், அங்கே அந்த சபையில் நான் மேய்ப்பராக இருந்த போது, நான் வேலை செய்தேன், நான்... நான் பொதுச்சேவை நிறுவனத்தில், 17 வருடங்கள் வேலை பார்த்தேன், அப்போது என்னுடைய ஜீவியத்தில் ஒரு தடவையாகிலும் காணிக்கை எடுத்ததே கிடையாது. என்னுடைய சொந்த செலவுகளையும் மற்ற காரியங்களையும் நானே செலுத்தினேன், என்னுடைய தசமபாகங்களையும், என்னால் கூடுமான ஒவ்வொன்றையும், சரியாக சபைக்கு செலுத்தினேன், ஒவ்வொன்றும் சரியாக சபைக்குள் சென்றது.

இப்பொழுது, வழக்கமாக இங்கே வெளியில், அவர்கள் எனக்கு காணிக்கை

கொடுக்கிறார்கள். நான் அதை தெளிவுபடுத்த விரும்புகிறேன் (ஏனென்றால் தர்மகர்த்தாக் களில் சிலர் இப்பொழுது இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்): எனக்குக் கொடுக்கப் படும் காணிக்கைகளும், பணமும் என்னிடம் நேரடியாக வருவதில்லை. நான் சபையி லிருந்து சம்பளம் வாங்குகிறேன்: எனக்கு வாரத்திற்கு 100 டாலர்கள் கிடைக்கின்றன, அதாவது வருடத்திற்கு 5200 டாலர்கள், வாரத்திற்கு 100 டாலர்கள். ஆனால் இப்பொழுது நீங்கள் எனக்குக் கொடுக்கும் காணிக்கையானது, அது கர்த்தருடைய வேலைக்கே ஒதுக்கப்படுகிறது. தர்மகர்த்தாக் கள் இதைக்கொண்டு என்ன செய்கிறார் களோ அதுதான் இதோ இருக்கிறது: வேறு எதற்காகவும் இது செலவழிக்கப்பட முடியாது. நாம் அதை அழைக்கிறபடி, அது குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒதுக்கப்படுகிறது, அது வேறு எதற்காகவும் செலவழிக்கப்பட முடியாது. அந்தப் பணமானது ஒரு குறிப்பிட்ட நிதிக்குப் போகிறது; அந்த நிதி படிப்படியாக

அதிகரிக்கும் போது, அது, "வெளிநாட்டு ஊழியத்திற்காக" என்று அழைக்கப்படுகிறது, அதற்காகத்தான் அது ஒதுக்கப்படுகிறது...

இப்பொழுது அநேக நேரங்களில், இங்கே ஐக்கிய நாடுகளுக்கு விரோதமாக நாம் சீறி யெழுவதை நீங்கள் காணலாம், வெளிநாடு களிலோ, அங்கே அது எப்படி இருக்கும் என்று உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியும். எதுவும் இல்லாமல், புசிக்கக் கூட போதுமாவை இல்லாமல் இருக்கும் அங்கே யுள்ள அந்த ஏழை ஜனங்களிடம் நாம் போகும் போது, பின்னாலுள்ள அந்த அஞ்ஞான (heathen) தேசங்களில்... சிறிய தாய்மார்களும், அவர்களுடைய சிறிய குழந்தைகளும் வீதிகளில் படுத்துக்கொண்டு, அவர்களுடைய கன்னங்கள் குழிவிழுந் திருக்க, மரித்துக் கொண்டும், அந்தத் தாய் அக்குழந்தையை உங்களிடம் தர முயற்சிப் பதையும் நான் கண்டிருக்கிறேன்; நீங்கள் அந்தக் குழந்தையை எடுப்பீர்களானால், இதோ வேறொரு குழந்தை, இதோ

வேறொன்று, வேறொன்று; சாப்பிட எதுவுமே யில்லை. அந்த ஜனங்களுக்கு உணவூட்ட போதுமானவைகளை நம்முடைய குப்பைத் தொட்டிகளிலிருந்தே வாரி (எடுத்துக் கொள்ள லாம்). அது உண்மை. நாம் எவ்வளவு செல்வச் செழிப்போடு இருக்கிறோம் என்பதை நாம் உணருவதில்லை.

அப்பிரிக்காவின் அடர்ந்த காடுகளிலும் மற்றவைகளிலும், எவ்வாறு அந்த ஜனங்கள் என்னை அங்கே அழைத்துச் செல்ல வேண்டி யிருந்தது? அவர்களிடம் ஒரு காசும் (cent) கிடையாது, அவர்களிடம் இல்லை, என்னை அங்கே அழைத்துச் செல்ல எந்த வழியுமே இல்லாதிருந்தது. அவர்களும் கூட சுவிசே ஷத்தை, கர்த்தராகிய இயேசு இந்த வாரத்தில் நமக்கு அருளியிருக்கிற இந்த சுவிசேஷத் தைக் கேட்க வேண்டும் என்று நான் உணருகிறேன்.

நான் அந்தப் பணத்தை எடுக்கிறேன், ஏனென்றால் நான்... நீங்கள் அதை எனக்குக் கொடுக்கிறீர்கள், நான் அதற்குப் பொறுப்பாளி

யாக இருக்கிறேன். எனவே இந்த அமைப்பில் வேலை செய்து கொண்டிருக்கிற என் மூலமாகவே அது உள்ளே வருகிறது, அப்படி யானால் அது வெளிநாட்டு ஊழியங்களைத் தவிர வேறு எதற்காகவும் செலவு செய்யப்பட முடியாது.

அது இந்த இதே சுவிசேஷத்தை அங்கே யிருக்கும் அவர்களிடம் எடுத்துச் செல்கிறது. செய்யாதீர்கள்... நானே போகிறேன், எனவே என்னால் கூடுமான மட்டும் மிகவும் சிறந்ததைச் செய்கிறேன் என்பதை நான் அறிவேன், அந்த பணத்தின் ஒவ்வொரு காசுக்காகவும் (cent) நான் பதில் கூற வேண்டியிருக்கும் என்பதை அறிவேன். நான்— நான் தேவனுடைய நல்லதொரு கண்காணி யாக இருக்கவே விரும்புகிறேன். என்னால் அந்தக் காரியங்களில் உண்மையுள்ளவனாக இருக்க முடியாவிட்டால், என்னால் மற்ற காரியங்களில் உண்மையுள்ளவனாய் இருக்கப் போவது எப்படி? நீங்கள் பாருங்கள்? எனவே,

நான் உங்களுக்கு நன்றி கூற விரும்புகிறேன் — விரும்புகிறேன்.

(அந்த சகோதரன் சற்று முன்பு கூறினபடி), இந்தப் பிற்பகலில் எனக்குக் கொடுக்கப்பட்ட காணிக்கை, அதைச் செய்ய வேண்டாமென்று நான்—நான் அவர்களைக் கேட்டுக் கொண்டேன். ஆனால், வழக்கமாக அவர்கள் செய்வதில்லை... அவர்களுக்கு இது தெரியும்: செலவுகள் செய்ய முடியாவிட்டால், நாங்கள் அந்தக் காணிக்கையில் கொஞ்சம் எடுத்துக்கொண்டு, அது அஞ்சல் மூலமாக சபைக்கு அனுப்பப்பட்டு வருகிறது, (அது அங்கே இந்த *மற்றதற்காக* ஒதுக்கப்படுகிறது), பிறகு நாங்கள் அந்தச் செலவுகளை எழுதி வைத்து விடுகிறோம். யாருக்கும் பணம் செலவாக எங்களுக்கு விருப்பமில்லை — அதை நாங்கள் விரும்புவதில்லை. பாருங்கள்? நாங்கள் ஒருபோதும்...

நான் ஒவ்வொரு கூட்டத்திலும் மேலாளரிடம் கட்டாயமாக கூறிவிடுவதுண்டு (இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கும் சகோதரன் ஜாக்

மூர் அவர்கள், என்னோடு ஆரம்பத்திலேயே ஊழியக்களத்தில் இருப்பவர்களில் ஒருவர்; நான் ஒருபோதும் அமைதியாக நின்று கொண்டு, "யார் *இவ்வளவு* கொடுப்பது? யார் *அவ்வளவு* கொடுப்பது?" என்றும், "காணிக்கை தட்டை அனுப்பி விட்டு அதைக் குறித்தே மறந்து விடுங்கள்" என்றும் பணத் திற்காக பிச்சை எடுக்க மாட்டேன் என்பது அவருக்குத் தெரியும்), தேவன், அவர்—அவர் நிறுத்தி விடும்போது, furni —... அவர் இங்கே வெளியே என்னுடைய தேவைகளை நிவிர்த்தி செய்வதை நிறுத்தி விடும் போது, அதுவே நான் ஊழியக்களத்தை விட்டு விலகிச் செல்வதற்கான நேரம். எனவே, பணத்திற்காக இப்படி பிச்சை எடுப்பதிலும், பிடுங்குவதிலும், வற்புறுத்துவதிலும், மிரட்டுவதிலும், மற்ற ஒவ்வொன்றையும் செய்வதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. இல்லை, ஐயா.

நான் முதலாவது ஊழியத்துக்கு வந்த போது, வரலாற்றினூடாக, ஒரு மனிதனுக்கு,

கிறிஸ்துவினுடைய ஒரு ஊழியக்காரனுக்கு தீங்கு விளைவிக்கிற மூன்று காரியங்கள் உண்டு என்பதைக் கண்டுபிடித்தேன். அவன்... தேவன் அவனை ஆசீர்வதித்து, அவனுக்கு வெறுமனே ஒரு சிறு ஊழியத் தைக் கொடுக்கும் போது, நீங்கள் அறியும் முதலாவது காரியம் என்னவென்றால், அவன் விழுந்து போகும் காரியங்களில் ஒன்று *பணமாகும்.*

அடுத்த காரியம் *பிரபலமாயிருப்பது:* தான் *யாரோ ஒருவன்* என்று நினைத்துக் கொள்ளும் நிலையை அடையும் போது, சரியாக அப்போதே தன்னுடைய பாதையை விட்டு அவன் வெளியே போய் விடுகிறான். நாம்... நம் மத்தியில் பெரிய விசேஷித்த திறமை படைத்தவர்கள் யாரும் கிடையாது, நாம் எல்லாரும் ஒரே விதமாகவே இருக்கி றோம், நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் (பாருங்கள்?); நம்மில் பெரியவர் கள் யாரும் கிடையாது, நம்மில் சிறியவர்களும்

யாரும் இல்லை, நாம் எல்லாருமே தேவ னுடைய பிள்ளைகளாக இருக்கிறோம்.

அதன்பிறகு (பணம், புகழ்), மற்றும் *பெண்*: நான் ஸ்திரீகளை வெறுப்பவன் என்று பரவலாக அறியப்படுகிறேன், எனவே, உங்களுக்கு அது தெரியும், நீங்கள் அதை விட்டு விலகி இருக்கும் வழி அதுதான், எனவே தான் அது—அது காட்சியை விட்டு வெளியே இருக்கிறது. இந்த உலகத்திலுள்ள எல்லா பெண்களிலுமே ஒரு பெண் தான் எனக்குக் கிடைத்தாள், அதுதான் என்னுடைய மனைவி, தேவன் உலகத்தில் வைத்திருப்பதி லேயே எனக்கு மிகவும் இனிய பெண்ணாக இருப்பவள் அவள் தான். அது உண்மை. அவள் என்னுடையவள், எனக்கு மட்டுமே உரியவள்; நான் அவளுடையவன், நானும் அவளுக்கு மாத்திரமே உரியவன். நான் வாலிபனாக இருக்கும் போது, அவ்வாறே நினைத்தேன்; இப்பொழுது, நான் வயதான

மனிதன், நான் இன்னும் அவ்வாறு தான் நினைக்கிறேன்.

எனவே நான்... அவள்... நான் அந்தக் காரியங்களை தவிர்த்து விலகி இருக்கவே முயற்சித்து, கர்த்தராகிய இயேசுவிடம், “தேவனே, இங்கே வெளியில் அது மிகவும் கடினமாக இருக்கிறது, ஏனென்றால் இந்த ஊழியம் மிகவும் வித்தியாசமாக உள்ளது. அது அப்படியே – அப்படியே ஜனங்களுக்கு ஒவ்வொரு விதத்திலும் புதிராகவே இருக் கிறது. *அந்தக்* காரியங்களோடு சாத்தானோடு போராடுவது மிகவும் கடினமாக இருக்கிறது, *இந்த* மற்றவைகளைத் தனியே விட்டு விடுகிறேன்” என்று கூறுகிறேன். எனவே, தேவனுடைய இராஜ்யம் மகிமைப்படும்படி, ஒவ்வொருக்காகவும் என்னால் கூடுமானவரை யில் மிகவும் சிறந்ததை செய்யவே நான் வெளியில் இருக்கிறேன்.

# தேவனுக்கு மரியாதை செலுத்த முழந்த ஒரே வழி யாதெனில், தேவனுடைய ஊழியக்காரனுக்கு மரியாதை செலுத்துவது தான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 56-10-02E
# தீர்க்கதரிசியாகிய எலிசா

60. இந்நிலையில், எலிசா சூனேம் என்னப்பட்ட ஒரு சிறு இடம் வழியாகக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. அந்த இடம் வேதாகமத்தில் மிகச்சரியாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. யோசுவா வில், அவர்கள் தேசங்களைப் பங்கிட்ட போது, சூனேம் என்ற இந்தச் சிறிய இடம் எங்கேயிருந்தது என்று அவர்கள் குறிப்பிட் டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் ஒவ்வொரு சிறிய இடத்திலும், தேவன் எங்கோ ஒரு சாட்சியைக் கொண் டிருக்கத் தான் போகிறார். அவ்வண்ண மாக, அதற்கு இசைய அங்கே சூனேமில், ஒரு உண்மையான பெண்மணி வசிக்க நேர்ந்தது. அவள் ஒரு விசுவாசமுள்ள

பெண்ணாக (loyal woman) இருந்தாள், அவள் ஒரு உண்மையான சீமாட்டி. அவளுடைய புருஷன் வயது முதிர்ந்த ஒருவனாக இருந்தான்.

61. எலிசா, அதனூடாகப் போகும்படி நேரிட்டது, அவன் மேலே கர்மேல் பர்வதத்துக்கு போய்க் கொண்டிருந்தான். அவன் மேலே போகும் பாதையில், கர்மேல் பர்வதத்துக்குப் போக வேண்டு மானால், சூனேம் வழியாகத்தான் போக வேண்டியிருந்தது. இப்பொழுது, எலிசா வுக்கு அங்கு மேலே ஒரு குகை இருந்தது. அவன் ஜெபிக்கப் போகும் இடமாகிய ஒரு பிரத்யேகமான குகை அவனுக்கு இருந்தது. தற்செயலாக, மேலே கர்மேல் பர்வதத்தில் ஒரு குகை இருந்தது, அதுதான் அது. அவன் அமாவாசையிலும் (new moon - பொதுவாக பூமியில் இருந்து நிலவின் ஒரு பகுதியை மட்டுமே நாம் பார்க்க முடியும்.

எனவே நிலவு பூமிக்கும், சூரியனுக்கும் நடுவில் சுற்றி வரும் போது, நிலவில் நமக்கு தெரியாத மறு பகுதியில் மட்டுமே சூரிய ஒளி படுகிறது. அப்போது நம் கண்களுக்கு நிலவானது புலப்படாது, இதை தான் நாம் அமாவாசை என்று கூறுகின்றோம் - மொழிபெயர்ப்பாளர்), ஓய்வு நாளிலும் ஜெபிக்கும்படியாக அங்கே மேலே போவான்.

62. நல்லது, அவன் பட்டணத்திலே மிக நன்கு விரும்பப்பட்டவன் அல்ல என்று நினைக்கிறேன், அவன் அதனூடாகக் கடந்து போகையில், அவன் புறக்கணிக்கப் படுவதை (rejected - நிராகரிக்கப்படு வதை, ஒதுக்கித்தள்ளப்படுவதை, வெளி யேற்றப்படுவதை, விலக்கிவைக்கப்படு வதை, மறுக்கப்படுவதை, அங்கீகரிக்கப் படாதிருப்பதை, அப்புறப்படுத்தப்படு வதை, கைவிடப்படுவதை, ஒதுக்கப்படு

வதை, தள்ளப்படுவதை, ஏற்க மறுக்கப் படுவதை, தள்ளிவிடப்படுவதை, துரத்தப் படுவதை - மொழிபெயர்ப்பாளர்) இந்தப் பெண்மணி நிச்சயமாகக் கண்டிருக்க வேண்டும். சூனேமானது, அவன் தன்னுடைய பிரயாணத்தில் போகக்கூடிய அளவுக்கு ஏறக்குறைய மேலே அவ்வளவு தூரத்தில் இருந்தது, அங்கே இரவு முழுவதும் தங்க வேண்டியிருந்தது. எனவே அவன் அதன் பக்கமாகக் கடந்து போகையில், அவன் ஒருக்கால் தெரு (வீதிகளிலோ), அல்லது காடுகளிலோ, எங்கேயோ இருந்த வயல்வெளிகளிலோ தங்கியிருப்பான், ஒருக்கால், சில நேரங் களில், ஆகாரமும் இல்லாமல் இருந்திருப் பான். இந்த நல்ல பெண்மணியோ, அவள் மேலே பட்டணத்திற்குள் போகையில், இந்த மனிதனை அவள் துரிதமாக அடையாளம் கண்டுகொண்டு, அவன் ஒரு

பரிசுத்தவான் என்பதை அறிந்து கொண்டாள்.

63. இப்பொழுது, அவள் ஒரு சூனேமிய ஸ்திரீயாக இருந்தாலும், தன்னுடைய இருதயத்தில், அவள் ஒரு விசுவாசியாக இருந்தாள். விசுவாசியாக இருக்கும் நபர் எங்கேயிருந்தாலும், அது ஒருபொருட்டே யல்ல, தேவன் தாம் தேவனாக இருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக, அவர் ஏதாவது ஒருவிதத்தில் உண்மையான செய்தியை அவர்களிடம் கொண்டுபோய் சேர்த்து விடுவார். அது சரியே. ஏதோவொரு இடத்தில் அதைக் கொண்டுபோய் சேர்க்கும்படியாக அவர் அதை நிறைவேற்றுவார் (manage - நடத்துவார், இயக்குவார் - மொழிபெயர்ப் பாளர்). எங்கோவிருக்கும் யாரோ ஒருவரின் இருதயத்தில் அவர் தொடர்ச்சி யான ஒரு நோவை வைத்துவிட, அவர்கள்

இவர்களுக்கு கடிதம் எழுதுவார்கள், வானொலியைத் திருப்பியோ, அல்லது வேறு ஏதோ ஒரு வழியில் இவர்கள் ஒரு சாட்சியைக் கேட்பார்கள்; இவர்கள் உண்மையான செய்தியைக் கேட்பார்கள். தேவன் அவர்களுக்கு அதை அருளி விடுவார்.

64. அநேகமாக, இந்தப் பெண்மணி, ஒருக்கால், நாம் இவ்வாறு கூறுவோம், அவள் ஒருநாள், மேலேயிருந்த வீதிக்குப் போனபோது, யாரோ ஒருவர் தெரு மூலையில் பிரசங்கம் பண்ணிக் கொண் டிருப்பதைக் கேட்டாள். மேலும் அவன் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டாள், அது தேவனுடைய ஒரு ஊழியக்காரன் என்பதை அவள் அறிந்து கொண்டாள். எனவே, எலிசா பிரசங்கம் பண்ணுவதை முடித்த பிறகு, அவள், "அன்பான, ஐயா, நீர் வந்து, என்னுடைய கணவரை

சந்திப்பீரா? நான் உடனடியாக உங்கள் எல்லாருக்கும் கொஞ்சம் மதிய உணவு ஆயத்தம் செய்கிறேன்" என்று கூறுவதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது.

65. நல்லது, அதற்கு எலிசா, "பெரு மாட்டியே, உனக்கு நன்றி. நான் அதைச் செய்ய மகிழ்ச்சியாயிருப்பேன், ஏனென் றால் செய்திக்குப் பிறகு எனக்குச் சற்று பசிக்கிறது" என்றான். எனவே அவர்கள் கீழேயிருந்த அந்த வீட்டிற்குப் போனார் கள். அவள் உள்ளே போய், இந்தத் தீர்க்கதரிசியையும், ஊழியக்காரனாகிய கேயாசியையும் தன்னுடைய புருஷனுக்கு அறிமுகம் செய்து வைத்துவிட்டு, மிகத் துரிதமாக கொஞ்சம் சுட்ட அப்பங்களை யும், கொஞ்சம் அருஞ்சுவையுண்டிகளை யும், கொஞ்சம் தேநீருடன் உண்ணும் இனிப்பு அப்பவகைகளையும், அதைப்

போன்ற மற்றவைகளையும் ஆயத்தம் பண்ணினாள்.

66. சென்ற மாலையில், தற்செயலாக, எடுத்துக்கொள்ளும்படியாக, வீட்டில் செய்யப்படும் இனிப்பு அப்பவகை மற்றும் சில காரியங்களைக் கொண்ட ஒரு பெட்டியை எனக்கு அனுப்பின டென்மார்க் தேசத்து டேனிஷ் மொழி பேசும் ஒரு சிறிய பெண் அங்கேயிருக்கிறாள்... அவள்.... இல்லை என்று எனக்குத் தெரியும். அவள் இங்கேயிருந்தால், எப்படியும் அவளால் ஆங்கிலத்தைப் புரிந்துகொள்ள முடியாது. அநேகமாக, இடதுகை செய்வதை வலதுகை அறிந்துகொள்வது என்பது, அதை அறிந்துகொள்ள அவள் விரும்ப மாட்டாள். உங்களுடைய சிறிய அடை யாள சின்னங்களுக்காகவும் ஆசீர்வாதங் களுக்காகவும், உங்கள் ஒவ்வொருவருக் கும் நான் நன்றி கூறுகிறேன். நான்

அவைகளைப் பாராட்டுகிறேன். வீட்டில் குழந்தைகளுக்காகக் கொண்டு செல்லும்படி, இந்தச்சிறு டென்மார்க் தேசத்துப்பெண் (Danish woman) கொஞ்சம் இனிப்புகளை (cookies) எனக்கு அனுப்பியிருந்தாள். மேலும் அவர்கள் டேனிஷ் மொழி பேசும் டென்மார்க் தேசத்தவர்கள் என்று கூறினார்கள், அவர்களால் ஆங்கில மொழியை எழுத முடியாது, எனவே அதை எழுதுவதற்கு அவர்கள் வேறு யாரோ ஒருவரைக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது, நான் அவைகளைக் குழந்தைகளுக்குக் கொண்டு செல்வதற்கு முன்பாக, அவைகளைச் (சாப் பிடாமல்) வைத்திருப்பதற்கு, எனக்குப் பயங்கரமான நேரம் உண்டாயிருக்கிறது. நான் அப்படியே மிக மோசமான நேரம் உடையவனாயிருக்கிறேன். நான் முன்னும் பின்னும் நடப்பேன், அவைகளை நோக்கிப்பார்ப்பேன், மேலும் மறுபக்க

மாகத் திரும்பி, அவைகளைப் பார்ப்பேன். ஆனால் நான் வீட்டிற்குப் போவது மட்டுமாக, அதைத் தொடர்ந்து வெற்றிகர மாக (வைத்திருக்க முயற்சித்துக் கொண் டிருக்கிறேன்.

67. ஆனால் ஒருக்கால், இந்தப் பெண் அவைகளை ஒரு தட்டு முழுவதுமாக, மேஜையின் மேல் வைத்திருப்பாள், எலியாவுக்கு ஒரு - ஒரு உண்மையான யூபிலி உண்டாயிருந்தது. அதற்காக அவன் அந்தப் பெண்மணிக்கு நன்றி கூறினான். மேலும் அவன் அடிக்கடி அப்பக்கமாகக் கடந்து சென்றான். எனவே இந்த நல்ல பெண்மணி... அபிப்பிராயம் அல்லது வெளிப்பாட்டைப் பெற்றிருந்தாள். வெளிப்பாட்டைப் பின்பற்றுவதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நிச்சயமாக. சபையா னது தெய்வீக வெளிப்பாடுகளின் மேல்

தான் கட்டப்பட்டிருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன்.

68. இந்த மனிதனுக்காக அவள் ஏதோ வொன்றைச் செய்ய ஊக்குவிக்கப்பட்டவளாக இருக்கையில், அவள் ஒருநாள் தன்னுடைய புருஷனிடம், "அன்பே, இப்பொழுது பாரும், நாம்-நாம் நன்றாக... இருக்கிறோம். நம்மால் இதைச் செய்ய முடியும். நமக்கு சம்பூரண செழிப்பு இருக்கிறது. நமக்குப் பெரிய பண்ணைகளும் மற்றவைகளும் உள்ளன, நம்மால் இதைச் செய்ய முடியும். இப்பொழுது, நாமிருவரும் யேகோவாவில் விசுவாசம் உள்ளவர்களாக இருக்கிறோம், இவர் அவருடைய ஊழியக்காரர். இப்பொழுது, நாம் அவருக்கு ஏதோ அருமையான ஒன்றைச் செய்வோம், அவருக்காக அதைச் செய்யும் போது, நாம் அதை யேகோவாவுக்காகவே செய்து கொண்டிருக்கிறோம்.

அவை எல்லாவற்றிற்கும் பிறகு, உமக்கு வயதாகிக் கொண்டிருக்கிறது, நானும் நடுத்தர வயதுள்ளவள்; எனவே இவை எல்லாம் ஏதோவொரு இடத்தில் விழுந்து போவதற்கு நீண்ட காலம் ஆகாது; நாம் போவதற்கு, நமக்கு எந்தப் பிள்ளைகளோ அல்லது எதுவுமில்லை. எனவே யேகோ வாவுடைய தீர்க்கதரிசியை உபசரிப்பதன் மூலமாக, நாம் யேகோவாவுக்காக ஏதாகிலும் செய்வோம்; அவர் ஒரு பரிசுத்தவான் என்றும் அவர் இந்த வழியாகக் கடந்து போகிறார் என்று நான் காண்கிறேன்" என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது.

69. தேவன் அவனுக்குள்ளிருந்து கிரியை செய்து கொண்டிருப்பதை அவள் கண்டதின் நிமித்தமாக, அவள் அவனை, "தேவனுடைய மனுஷன்" என்று அழைத் தாள். தேவன் இந்தத் தீர்க்கதரிசிக்குள் இருந்தார் என்பதை அவள் அறிந்திருந்

தாள், அவள் தேவனுக்கு மரியாதை செலுத்த விரும்பினாள். தேவனுக்கு மரியாதை செலுத்த முடிந்த ஒரே வழி யாதெனில், தேவனுடைய ஊழியக்கார னுக்கு மரியாதை செலுத்துவது தான். இப்பொழுது, நண்பர்களே, நீங்கள் தேவ னுடைய ஒழுங்கை மதித்து நடக்கும்போது, அந்தவிதமாகத்தான் நீங்கள் அதைச் செய்கிறீர்கள். அது உண்மை.

---

**(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை.)**



# வாங்குவதைக் காட்டிலும் கொடுப்பதே மிகவும் ஆசீர்வாதமானது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 50-08-22 கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது

நீங்கள் அதை கவனித்தீர்களா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை, அது ஒரு சகோதரி எனக்குக் கொடுத்த ஒரு சூட் நான் - நான் அதை மிகவும் பாராட்டுகிறேன். உங்களுக்கு மிகவும் நன்றி. அது.... தேவன் அந்த சகோதரியை ஆசீர்வதிப்பாராக. உங்கள் எல்லாருக்குமே நன்றி.

ஜனங்கள் அருமையான கழுத்துப் பட்டைகளையும், சட்டைகளையும், காலுறைகளையும் எனக்கு அனுப்பித் தருகிறார்கள். நான் அதைக் குறித்த எதையாகிலும் இந்த மேடையிலிருந்து கூற எனக்குக் கொஞ்சம் பயமாக இருந்தது. ஒருக்கால் நான்... என்று யாரோ ஒருவர் நினைக்கலாம். தவறான கருத்தை

உண்டாக்கி விடலாம், நான் அதை அப்படியே கூறிக் கொண்டிருக்கிறேன், ஏனென்றால் ஒருக்கால்..... ஓ, இல்லை. அவ்வாறு எண்ணி விடாதீர்கள். ஆனால் அது - அது மிகவும் பாராட்டுக்குரியது. ஜனங்கள் அவ்விதமாக காரியங்களைச் செய்வதை நான் அனுமதிக்க முடிய வில்லை, அப்படியானால் நான் ஏதோ வொரு விதத்தில் அதைக் குறிப்பிடுவ தில்லை. சிலர் தங்கள் முகவரியைக் கூட அதில் எழுதுவதில்லை என்பது உங்க ளுக்குத் தெரியும்.

அந்த சூட் துணியை எனக்கு வாங்கிக் கொடுத்த பெண்மணியின் பெயரை என்னால் கூற முடியவில்லை. என்னால் அவளை ஒருபோதும் அனுமதிக்க முடிய வில்லை - வலது கை.... வலது கை செய்கிறதை இடது கை அறியாதிருக்கக் கடவது என்று நினைக்கிறேன். ஆனால்

என்னுடைய இருதயத்தின் ஆழத்திருந்து நான் - நான் அதைப் பாராட்டுகிறேன்.

7. என் அன்பு சகோதரியிடமும், மற்றவர்களாகிய உங்கள் எல்லாரிடமும் இதைக் கூறுகிறேன். நான் அதைக் குறித்து பாராட்டுவதைக் காட்டிலும் அதிகமாக பாராட்டுகிற எவருக்கும் இனி உங்கள் ஜீவியத்தில் நீங்கள் எதையுமே ஒருபோதும் கொடுக்க மாட்டீர்கள். அது சரியே. நான் அதைப் பாராட்டுகிறேன்.

"மிகவும் சிறியவராகிய (அதுதான் நான்) என்னுடைய சிறியவர்களுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" என்று வேதாகமம் கூறுகிறது. நீதிமான் என்னும் நாமத்தி னிமித்தம் நீதிமானை ஏற்றுக் கொள்ளுகிற வன், நீதிமானுக்கேற்ற பலனை அடை வான். தீர்க்கதரிசி என்னும் நாமத்தி னிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்

ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான் (மத்தேயு 10:41).

இப்பொழுது, தேவன் உங்களுக்கு அதை நூறு மடங்காக திருப்பித் தருவார் என்று நம்புகிறேன். நான் அதில் நிச்சயமுடையவனாயிருக்கிறேன், தேவன் என்னுடைய சரியான மனநிலையில் நான் இருக்கும்படி என்னை அனுமதிப்பா ரானால், நான் அதை அணிந்து கொண்டு ஒருபோதும் மதுக்கடையில் இருக்கவே மாட்டேன், ஏனென்றால் நான் அந்த இடங்களுக்கு செல்வதில்லை. நான் ஒரு மதுக்கடையிலும் இருந்ததே கிடையாது. நான்.... நான் - நான் சபைக்கும், என்னுடைய வீட்டிற்கும், மற்றும் வியாதி யஸ்தரை சந்திக்கும்படி வெளியேயும் மாத்திரமே செல்கிறேன். அந்த இடங்க ளுக்கு தான் நான் செல்கிறேன்.

இந்த சூட்டை அணிந்தபடி நான் பிரசங்கிக்கையில், நான் ஆயிரக்கணக்கான

ஜனங்களை ஆதாயப்படுத்தும்படி தேவன் செய்வார் என்று நம்பிக்கையாயிருக் கிறேன். பரிசுத்த ஆவியானவர் மிகவுமாக அபிஷேகித்து, என்னுடைய அருகில் வரும் ஜனங்களும் கூட, அவர்களில் அநேகரும், தாங்கள் ஆர்கன்ஸாஸில் செய்தது போல, தொட்டு, அவருடைய மகிமையான வல்லமையினால் சுகமடைய வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

மகிமையில், வாழ்க்கை எல்லாம் முடிந்து, நம்முடைய பூமிக்குரிய பிரயாணம் முடிவு பெறும் போது, ஒரு மகத்தான வெண் வஸ்திரத்தை அவர் தரிப்பிப்பதை நான் காணும்படியாக அருகில் நின்று கொண்டிருப்பேன் என்று நம்புகிறேன். அவருடைய நீதியின் (வஸ்திரத்தை உங்களுக்கு உடுத்துவிக்கிற பிதாவை நோக்கி நான் என்னுடைய தலையை வணங்கி, உங்களுக்காக கர்த்த ருக்கு நன்றி கூறுவேன். தேவன் எப்பொ

ழுதும் உங்களோடு இருக்க வேண்டும் என்பதே என்னுடைய ஜெபமாயுள்ளது.

8. ஒருசமயம், யாராவது ஒருவர் உங்களுக்குக் கொடுக்கும் ஒரு அன்பளிப்பைப் பெற்றுக்கொள்ள உரிமை இல்லை என்று நான் எண்ணியிருந்தேன். சகோதரன் ஷேரிட் (Brother Sharritt) என்ற மனிதர் தான் அதைக் குறித்து என்னைத் திருத்தி சரிப்படுத்தினார். அவர், "சகோதரன் பிரன்ஹாமே, எந்தக் காரியத்தின் பேரிலும் நான் உம்மைத் திருத்தி சரிப்படுத்துவதை வெறுக்கிறேன்" என்றார். ஆனால், "நீர் அங்கே (அதைத்) தவறாகக் கருதிக் கொண்டிருக்கிறீர். அந்த ஜனங்கள் தாங்கள் வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ளாதபடிக்கு நீர் காரணமாய் இருக்கிறீரே, அவர்கள் தங்களுடைய - தங்களுடைய பலனை இழந்து விடும்படி நீர் காரணமாய் இருக்கிறீர். பெற்றுக்

கொள்வதைக் காட்டிலும் கொடுப்பதே அதிக பாக்கியமுள்ளது” என்றார்.

அதன்பிறகு அவர் தம்முடைய கதையை என்னிடம் கூறினார். நான்... நான் அதை இப்பொழுதே கூறலாம் என்று நம்புகிறேன். கொஞ்ச நேரமாகவே அது என்னுடைய மனதில் வந்து கொண்டே யிருக்கிறது. அவர் அரிசோனாவிலுள்ள போனிக்ஸை சேர்ந்த ஜான் பி. ஷேரிட் (John B. Sharritt), அவர் கூட்டத்தின் வியாபார மேலாளர்களில் ஒருவராவார்...

உங்களில் அநேகர் அவரை சந்தித் திருக்கிறீர்கள், அதில் சந்தேகமில்லை. இங்கேயிருக்கும் யாருக்காவது சகோதரன் ஷேரிட் அவர்களை அறியும்படியான வாய்ப்பு கிட்டியதா, அல்லது அரிசோனா விலுள்ள போனிக்ஸை சேர்ந்த ஜான் ஷேரிட் அவர்களை யாருக்காவது தெரி யுமா? நல்லது, அவர் ஓஹியோவிலுள்ள சின்சினாட்டியில் இருக்கும் தேவனுடைய

வேதாகமப் பள்ளியிலிருந்து வந்த (God's Bible School) ஒரு மனிதராவார்.

அந்த கல்லூரியின் தலைவர் சற்று முன்பு தான் நீண்ட தூரத்திலிருந்து தொலைபேசி மூலமாக என்னிடம் பேசிக் கொண்டிருந்தார், அவர் மிகவும் அருமை யான ஒரு மனிதர், சகோதரன் ஸ்டான்லி அவர்கள். உங்களில் அநேகர் சகோதரன் ஸ்டான்லி அவர்கள் பேசுவதைக் கேட்டிருக்கிறீர்கள்... எழுப்புதல்களைக் கொண்டு வருகிற (revivalist) தேவனுடைய மனிதர். அவர் இப்பொழுது என்னுடைய வீட்டில் எனக்காக காத்துக் கொண்டிருக் கிறார்.

9. அவரும் சகோதரன் ரெய்மன்ட் டி. ரிச்சி (Brother Raymond T. Richey) அவர்களும்... டெக்ஸாஸிலுள்ள ஹூஸ் டனைச் சேர்ந்த உங்களில் அநேகர் அவரைக் குறித்துக் கேள்விப்பட்டிருக் கிறீர்கள், இல்லையா? அவர் அசெம்

பிளிஸ் ஆப் காட் சபையைச் சேர்ந்தவர், அவருக்கு அங்கே ஒரு சுவிசேஷ... உண்டு.

இப்படியிருக்க சகோதரன் ஷேரிட் அவர்கள், உலகப் பிரகாரமான பொருட்கள் அவரிடம் மிக அதிகமாக கிடையாது, அவர் அப்படிப்பட்ட ஒரு நபராகப் பிறந்திருந்தார். அவருடைய தகப்பனார் மிகவும் ஏழ்மையான மனிதர், மேலும் அவர் மிகவும் போக்கிரியாக இருந்தார். அவர் இவருடைய தாயாரை விட்டு விட்டார். ஏறக்குறைய 15 வருடங்களுக்கு முன்பு, ஜான் ஷேரிட் அவர்கள் வெளியே மிசௌரியிலுள்ள செயின்ட் லூயிஸில் அவருக்கு முன்பாக ஒரு துண்டு ஒரு நிக்கல் காசு என்ற விதமாக ஆப்பிள் பழங்களை விற்றுக் கொண்டிருந்தார். ஆப்பிள் பழங்கள்.... ஒரு சிறு.... அவருடைய தாயாரை கவனித்துக்கொள்ள சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஒரு தள்ளு

வண்டியையும் உடையவராய் இருக்க அவரால் முடியவில்லை.

அவர் திக்கி திக்கி பேசுவது போன்று பேசுபவர். அவரால் பேசவே முடிய வில்லை. நீங்கள் போய் பேசுவீர்களானால், அப்படியே நிறுத்தி விட்டு....?... அவர் அப்படியே... அவர் மீண்டும் முயற்சிப் பார். உதாரணமாக, அவர், "மாலை வணக்கம்" என்று கூறப் போவதாக இருந்தால், அவர், "மார்..." என்று கூறுவார் (சகோதரன் பிரன்ஹாம் எளிதில் புரிந்து கொள்ள முடியாத சத்தத்தை உண்டாக் குகிறார் - ஆசிரியர்) சற்று நேரம் பொறுத்து, "மா..." என்பார். ஏறக்குறைய அந்தவிதமாகத்தான் அவர் அதைப் பேச முயற்சிப்பார்; அது மிகவும் மோசமாக இருந்தது....

10. நல்லது, ஆனால் அவர் ஒரு சிறு பையனாக இருந்த போதே கர்த்தரைத் தேடத் தொடங்கினார். எல்லா பையன்

களும் வாலிப பெண்களுடன் வெளியே வெவ்வேறு இடங்களுக்கு போய்க் கொண் டிருப்பார்கள். அவரோ, கர்த்தாவே, நான் - நான் உம்மைத் தான் நம்பியிருக்கப் போகிறேன். நான் - நான் - நான் - நான் வெளியே வாலிப் பெண்களுடன் பேச முயற்சிக்கிறேன், அது மிக மோசமாக இருக்கிறதே. ஆனால் நான் விவாகம் செய்து பிள்ளைகளைக் கொண்டிருக்க விரும்புகிறேன். நான் உம்மையே சேவிக்கப் போகிறேன், நீர் எனக்கு ஒரு மனைவியைக் கொடும்" என்றார். அவர் அதைக் கர்த்தரிடமே ஒப்புவித்தார். அப்போது அவருக்கு ஏறக்குறைய 25 வயது.

அவர் இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு பெண்ணின் பக்கமாகவும் கடந்து போயி ருக்க முடிந்திருந்தாலும், அவருக்கு கிடைத்த மனைவியைக் காட்டிலும் மிகச் சிறந்த ஒரு மனைவியை அவரால் பெற்

றிருக்க முடிந்திருக்காது. தேவன் அவருக்கு ஒரு அழகான சிறிய பரிசுத்தவாட்டியை கொடுத்தார்.

ஆனால் ஒரு பெரிய காரியம் என்னவென்றால் அவர் பிள்ளைகளை மிகவும் அதிகமாக நேசித்தார்... அவளோ மலடியாக இருந்தாள். அவர் விவாகம் செய்து, அநேக , அநேக , வருடங்கள் ஆகி விட்டன, ஆறு, ஏழு, எட்டு, பத்து வருடங்கள் ஆகி விட்டன, அவருக்கு பிள்ளை இல்லை.

அவர் தெருவில் கான்கிரீட்டை உடைத்துக் கொண்டிருந்தார், அவருக்கு ஜீவனம் நடத்த ஒரு மணி நேரத்துக்கு 25 சென்ட் காசுகள் (cents) கிடைத்தன. அவர்கள் தங்கள் பணத்தை சேமித்து வைத்து, அவர்கள் மூன்று அறைகள் கொண்ட ஒரு சிறு வீட்டை வாங்கினார்கள். கடுமையான பொருளாதார மந்தநிலை இருந்த முற்காலத்தில் அதற்கு ஏறக்குறைய

1500 டாலர்கள் செலவானது என்று நினைக்கிறேன். அவர்கள் பணத்தை செலுத்தி, செலுத்தி, செலுத்தி விட்டிருந்தார்கள். மேலும்... அவர்கள் கொடுக்க வேண்டிய அந்த பணம் எல்லாவற்றையும் கொடுக்கும்

11. ஆனால் சற்றேறக்குறைய அந்தப் பணம் எல்லாவற்றையும் செலுத்தித் தீர்த்த போது, அந்த சமயத்தில், அவர்களுக்கு போனிக்ஸில் ஒரு எழுப்புதல் உண்டா யிருந்தது. அங்கே டாக்டர் சட்டன் (Doctor Sutton) என்ற பெயருடைய ஒரு மனிதர் இருந்தார். அவரை உங்களுக்குத் தெரியுமா அல்லது தெரியாதா என்று தெரியில்லை, ஒரு....... அவர் அங்கே போனிக்ஸிற்கு ஆவார், அவர் சுற்றுலா பயணிகளுக்கான ஒரு முகாமில் (tourist camp) தங்கியிருந்தார்.

ஒருநாள் இரவு, கர்த்தர் சகோதரன் ஷாரிட் அவர்களுக்கு ஒரு சொப்பனத்தில்

தோன்றினார். அவர் இவரைப் பார்த்து, உன்னுடைய உலோக பாத்திரப் பண்டங்களையும், உன்னுடைய துணிமணிகளையும் எடுத்துக் கொண்டு, உன்னுடைய மனைவியையும் அழைத்துக் கொண்டு உன் வீட்டை விட்டுப் புறப்படு, இந்த வீட்டை சகோதரன் சட்டனுக்கு கொடுத்து விடு" என்றார்.

அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். மனம் சோர்ந்து போன நிலையில், ஏறக்குறைய பத்து வருடங்கள் கடுமையாக உழைத்து, பாடுபட்டு, சேமித்து வைத்த பிறகு, கர்த்தர் அந்த இடத்தை டாக்டர் சட்டன் அவர்களுக்குக் கொடுத்து விடும்படி அவரிடம் கூறினார், டாக்டர் சட்டன் அவர்களோ எல்லாராலும் நன்கு அறியப்பட்ட ஒரு - ஒரு பிரபலமான ஊழியக்காரராய் இருந்தார். சகோதரன் ஷாரிட், "சரி, கர்த்தாவே" என்றார்.

அவருடைய சிறு வாழ்க்கைத் துணையிடம் அவர் சென்று, "தேனே, கர்த்தர் என்னிடம் பேசி, நம்முடைய வீட்டை அவர்களிடம் கொடுத்து விடும்படி என்னிடம் கூறினார். நம்முடைய பாத்திர பண்டங்களையும், நம்முடைய துணிமணி களையும் எடுத்து விட்டு, இந்த வீட்டை டாக்டர் சட்டன் அவர்களிடம் கொடுத்து விடுவோம்" என்றார்.

அவர் சென்று, அவளிடம் கூறின போது, அவள், "சரி, அன்பே" என்றாள். அவள் தனது கணவனை நம்பினவளாய், அதைச் செய்யும்படி கர்த்தர் உங்களிடம் கூறியிருப்பாரென்றால், நமக்குக் கொடுக் கும்படி) தேவன் வேறு எதையாவது வைத்திருப்பார்" என்றாள்.

12. எனவே அவள்... இப்பொழுது அவரிடம் இருந்த எல்லாவற்றையுமே அவர் கொடுத்து விட்டார். அந்த இரவில் அவருடைய மனைவியை அழைத்துச்

செல்ல அவருக்கு ஒரு இடமும் இல்லாதிருந்தது. எழுபத்தைந்து காசுகள் (cents) பெறுமானமுள்ள சுற்றுலா பயணிகளுக்கான அந்த முகாமை அவர் கண்டுபிடித்தார். அவர்கள் அந்த இரவில் அந்த சுற்றுலா பயணிகளுக்கான முகாமில் தங்கி, தெருவில் கான்கிரீட் கட்டைகளை உடைத்து மணிக்கு 25 காசுகள் (cents) சம்பாதித்தார் (அது உண்மை), இவ்வாறு தினமும் வேலை செய்தார்... அவர் ஒரு மகத்தான பெரிய மனிதர், அவருக்கு ஏறக்குறைய 225 பவுண்டுகள் (சுமார் 102 கிலோகிராம் - தமிழாக்கியோன்) எடை இருக்கும்.

ஏறக்குறைய ஒரு வாரம் கழித்து, ஏதோவொரு பணக்கார சீமாட்டி அவரைப் பார்த்து, தனக்கு சொந்தமான மோட்டார் வண்டி பழுது பார்க்கும் இடத்திற்குப் பின்புறத்தில் தன்னுடைய பொருட்களில் சிலவற்றை இடம் மாற்றுவதாகவும்,

அவளுடைய மோட்டார் வண்டி பழுது பார்க்கும் இடத்தில் தங்க அவருக்கு விருப்பமா என்று அவரிடம் கூறினாள், அது மேலே கேமல்பேக் மலையை (Camelback Mountain) நோக்கிய திசையில் இருக்கிறது (அந்த இடம் எங்கே உள்ளது என்று உங்களுக்குத் தெரியும்), அது ஒருவிதத்தில் தேசத்திலுள்ள பெரிய உயர்குடி மக்கள் வசிக்கும் பழைய பகுதியாக இருக்கிறது. அவள், "நீர். நீர் என்னுடைய முற்றத்தை ஒழுங்காக வைத்திருப் பீரென்றால்...?... நீர் உள்ளே வரலாம், புல்வெளிக்கு தண்ணீர் ஊற்று வதையும் மேலும் மற்ற காரியங்களையும் தொடர்ந்து செய்யும். நீர் என்னுடைய மோட்டார் வண்டி பழுது பார்க்கும் இடத் தில் இலவசமாக தங்கிக் கொள்ளலாம்" என்றாள்.

அவர் ஒரு பொருளும் இல்லாமல் அங்கே மேலே இடம் பெயர்ந்தார்.

அவருக்கு சில பெட்டிகளும், அவருக்கு ஒரு...?... ம் கிடைத்தது, அவர் தரையில் படுத்தார், அவருக்கு ஒரு மெத்தையும் கிடைத்தது...... அவரும் அவருடைய மனைவியும் அங்கே தான் உறங்கினார்கள்.

சகோதரன் சட்டன், சகோதரன் ஷாரிட் அவர்களே, எனக்கு வேண்டாம்..." என்றார்.

இவரோ, "அதைக் கொடுக்கும்படி கர்த்தர் தான் என்னிடம் கூறினார். அதெல்லாம் சரிதான்" என்று கூறிவிட்டார்.

13. அவர் அவ்விதம் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தார். ஏறக்குறைய ஒரு வருட காலம் அவ்விதமாக இருந்து, ஒரு நல்ல கிறிஸ்தவ ஜீவியம் செய்தார். கடைசியாக, அவர் தங்கியிருந்த (அந்த வீட்டின்) சீமாட்டி கோடீஸ்வர பெண்மணி யாக இருந்தாள். அவள் அவருடைய நேர்மையைக் கண்டாள். அவர் பாபிலோ

னில் இருந்த தானியேலைப் போன்று ஒரு கிறிஸ்தவராக இருந்தார்.

அவள் ஒருநாள் அவரிடம் சென்று, "ஜான், என்னவென்று உமக்குத் தெரியுமா? கர்த்தர் கடந்த இரவு ஒரு சொப்பனத்தில் என்னிடம் பேசி, நீர் வியாபாரம் தொடங்க உமக்கு 10,000 டாலர்கள் பணத்தைக் கடனாக கொடுக்கும்படி என்னிடம் கூறினார்" என்றாள்.

"ஏன்," (அவரால் பேசவே முடிய வில்லை ), அவர், "சீமாட்டியே, என்னால் - என்னால் பேசக்கூட முடியவில்லை. நான் ஒருபோதும் ஒரு வியாபாரியாக ஆக மாட்டேன்" என்றார்.

அவளோ, "ஆனால் அதைச் செய்யும்படி கர்த்தர் என்னிடம் கூறினார், இதோ காசோலை உள்ளது" என்றாள்.

அவர், "நல்லது, ஆ, நீங்கள் இதைச் செய்ய நான் - நான் - நான் அனுமதிக்கவே

மாட்டேன். என்னுடைய.... ன் மேல் 10,000 டாலர்கள் பணத்தை வைக்க எனக்கு - எனக்கு விருப்பமில்லை... வேண்டாம், ஹே-உ" என்றார்.

எனவே அவள், "ஆனால் அதை உம்மிடம் கொடுக்கும்படி கர்த்தர் என்னிடம் கூறினார். நீர் ஒரு நல்ல நேர்மையான மனிதர் என்பதை கவனித்து, நீர் வேதாகமத்தை வாசித்துக் கொண்டிருக் கிறதையும் கவனித்தேன். நானும் எனக்கு ஒரு வேதாகமத்தை வாங்கி வாசித்துக் கொண்டிருக்கிறேன். நீர் வியாபாரம் தொடங்கும்படி, உமக்கு 10,000 டாலர் களுக்கான இந்த காசோலையைக் கொடுத்து, உமக்கு இந்தப் பணத்தைக் கடனாகக் கொடுக்கும்படி கர்த்தர் என்னிடம் கூறினார்" என்றாள்.

14. எனவே அவர் காசோலையைப் பெற்றுக் கொண்டார். என்ன செய்வ தென்றே அவருக்குத் தெரியவில்லை.

எனவே அவர் தொடர்ந்து சென்று கொண் டிருந்தார். ஒருநாள் சாயங்கால நேரத்தில், அவர்கள் மேலே நடந்து சென்று, இரண்டாயிரம் டாலர்கள் பெறுமானமுள்ள ஐந்து அறைகள் கொண்ட ஒரு சிறு பழைய வீடு விற்பனைக்கு இருப்பதைக் கண்டார். எனவே அவர் அங்கு சென்று, அந்தக் காசோலையை பணமாக மாற்றி, அதை இரண்டாயிரம் டாலர்களுக்கு வாங்கினார். அவரும் அவருடைய மனைவியும் அங்கே சென்று, அந்த இடத்திலிருந்த சுண்ணாம்புச்சாந்தை சுரண்டி எடுத்து விட்டு (knock off), அதில் மறுபடியும் அருமையாக சுண்ணச்சாந்து (பூசி) மாற்றி யமைக்கத் துவங்கினார்கள், அவரும் அவர் மனைவியும் ஒன்றாக வேலை செய்தனர். அவர் அந்த வீட்டிற்கு சாந்துபூசி (plastered), தரையை ஆயத்தப் படுத்தி, அதன்மேல் விற்பனைக்கு என்ற ஒரு அடையாளத்தையும் வைத்தார். அவர்

களுக்கு மூவாயிரம் டாலர்கள் கிடைக்குமானால், அவர்களுக்கு லாபம் கிட்டிவிடும். அவரோ அதை ஆறாயிரம் டாலர்களுக்கு விற்றார்.

இன்றைக்கோ ஜான் ஷாரிட் அவர்கள் ஐந்து லட்சம் டாலர்கள் செல்வத்திற்கு சொந்தக்காரராயிருக்கிறார் (worth). இது தொடங்கி ஏறக்குறைய ஆறு அல்லது ஏழு வருடங்கள் தான் ஆகியிருக்கிறது, அவர் ஐந்து லட்சம் டாலர்கள் மதிப்பு செல்வத்தையுடைய பணக்காரராக இருக்கிறார் (worth). அவர் மூன்று அருமையான சிறு பிள்ளைகளுக்குத் தகப்பனாய் இருக்கிறார். ஓ, என்னே.

அவர், "சகோதரன் பிரன்ஹாமே, நான்.... வைத்திருந்தால் என்னவாகியிருக்கும். செய்ய வேண்டுமென்று தேவன் என்னிடம் சொல்லியிருந்ததை ? டாக்டர். சுட்டன் அவர்கள் எடுத்துக்கொள்ளாமலிருந்திருந்தால் என்னவாகியிருக்கும்.

அது என்னவாக இருந்திருக்கிறது என்பதைப் பாரும்? ” என்று கூறினார்.

15. மேலும் இப்பொழுது, அவர் அங்கே நின்றுகொண்டு, "கர்த்தாவே, எப்பொழுதாவது நான் உம்முடைய செய்திட்டத்தை நான் காணும்போது, நான்...” என்றார். அப்படியே, அவரிடம் ஏராளமாக பணம் இருந்தது, "நான்.... விரும்பவில்லை " என்று கூறினார். அவருக்கு ஆரஞ்சு தோப்புகளும், கால்நடை வளர்ப்புப் பண்ணை வீடுகளும் சொந்தமாக உள்ளன. அங்கே அரிசோனா விலுள்ள மிகப்பெரிய திறந்தவெளி கால்நடைப்பண்ணைகளில் ஒன்றாகிய பெரிய தண்டர்பேர்ட் கால்நடை வளர்ப்புப் பண்ணை அவருக்கு சொந்தமாக இருக்கிறது.

அவர், 'இவைகள் எல்லாம்... நான் இவைகளைக் கொண்டு என்ன செய்வது என்றே தெரியாமல் இருப்பதைக்

காட்டிலும் எனக்கு - எனக்கு அதிகமான பணம் இருக்கிறது" என்றார்.

தேவன் அவருக்கு ஒரு அருமையான மகளையும், அதன்பிறகு ஒரு சிறு மகனையும், பிறகு ஒரு சிறு மகளையும் கொடுத்தார். ஆகையால் தான் அவர் இன்றிரவு நம்மோடு இல்லை. அந்தச் சிறு குழந்தை சமீபத்தில் தான் பிறந்தது. அவருடைய மனைவி இந்த வருடங்கள் எல்லாம் மலடாக இருந்தாள். மேலும் இப்பொழுது, அவள் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டிருக்கிறாள், அப்படியே...... செய்து கொண்டிருக்கிறார். ஓ, என்னவொரு சந்தோஷமான குடும்பம்.

அவர், "நான் போனிக்ஸ்-க்கு வரும் போது... ஒரு இரவில் கூட்டத்திற்குச் சென்றேன், கர்த்தாவே, நீர் அதைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தீரே, அந்த இடம் அதுதானா?" என்றார். அப்போது அவர் சொன்னார். என்னிடம் வந்து,

"சகோதரன் பிரன்ஹாமே, நீர் எனக்கு ஒரு பென்னிக்காசும் கடன்பட்டிருக்கவில்லை. ஆனால் என்னால் உம்முடைய தொப்பியை அனுப்ப முடிந்தாலோ, அல்லது உம்முடைய கோட்டை என்னால் கொண்டு வர முடிந்தாலோ, அந்தக் கூட்டத்தில் நான் இருக்க விரும்புகிறேன்" என்றார்.

நான் அவருக்காக ஜெபித்திருந்தேன், தேவன் மறுபடியுமாக அவருடைய பேசும் சக்தியை திரும்ப கொடுத்தார். இப்பொழுது, எல்லா இடங்களிலும் அவருடைய அருமையான வீட்டை உடையவராக சுகமடைந்தும் விட்டார். அவர் தாம் செய்கிற எல்லாவற்றிலுமிருந்தும் கர்த்தருக்கு தசம பாகங்களைச் செலுத்தி வருகிறார். ஓ, என்னே. அவர் அப்படியே ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார். எனவே அது இன்னும் அதிகமாக....

16. இப்பொழுது, நீங்கள் அவருக்கு (கடிதம்) எழுத விரும்பினால், வெறுமனே ஜான் B . ஷாரிட், போனிக்ஸ், அரிசோனா

என்று எழுதி விடுங்கள். அது அவருக்கு கிடைத்துவிடும். நீங்கள் அந்த சாட்சியை கேட்டுப் பாருங்கள்.

இப்பொழுது, அவர் கைப்பிரதிகளை யும் மற்றும் எல்லாவற்றையும் அச்சிட்டு, சவிசேஷத்தை எல்லாவிடங்களிலும் பரப்பிக் கொண்டிருக்கிறார். அவர் அநேக மாக மீண்டும் கூட்டத்திற்கு விரைவில் நம்மோடு இருப்பார்.

வாங்குவதைக் காட்டிலும் கொடுப்பதே மிகவும் ஆசீர்வாதமானது. பாருங்கள்?...

மேலும் இப்பொழுது, அது... என்று கூறிக் கொண்டிருக்கவில்லை. என்ன செய்ய வேண்டுமென்று தேவன் உங்க ளிடம் கூற விடுங்கள். புரிகிறதா? அங்கே யிருக்கும் திருமதி. ஜோன்ஸ் ஒரு விதவைப் பெண் என்றும், அவளுக்கு கொஞ்சம் - கொஞ்சம் துணிகள் தேவை என்றும், நீங்கள் போய், அந்த விதவைக்கு உதவி செய்யும்படியும் தேவன் உங்களிடம்

கூறும்போது, போய் அவளுக்கு உதவி செய்யுங்கள். நீங்கள் - நீங்கள் அதைச் செய்யுங்கள். ஏனென்றால் கவனியுங்கள், நண்பர்களே, நம்மிடம் இருக்கும் எல்லா பணமும் ஏதோவொரு நாளில் ஒழிந்து போகும். அது சரியே. அது இனிமேலும் இருக்காது. அது வெறுமனே நித்திய காரியங்களாக இருக்கின்றன. நாம் நம்முடைய ஆத்துமாவுக்குள் கொண்டிருக்கும் காரியங்கள் அவைதான். அது சரிதானா?

நாம் நிர்வாணிகளாக இந்த உலகத்திற்குள் வந்தோம், நாம் நிர்வாணிகளாகவே உலகத்தை விட்டு போவோம். "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்" என்று யோபு சொன்னது போல. அது சரியே.

---

**(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை.)**





செய்தி: எங்கள் நம்பிக்கை தேவனிடத்தில் இருக்கிறது, 51-0929

# நீங்கள் தேவனுக்காக எதையாகிலும் செய்ய விரும்பினால், அவருடைய ஜனங்களுக்கு எதையாகிலும் செய்யுங்கள்.

Rev. William Branham

சகோ. பிரன்ஹாம்:

நான் – நான் இதை பயபக்தியோடு கூறுகிறேன். ஒரு ஏழை மனிதனாய் இருப்பதையே நான் மிகவும் விரும்புகிறேன். நான் ஒரு கோடீஸ்வரனாக இருக்க வேண்டுமென்று விரும்பியிருந்தால், அவ்வாறு இருந்திருக்க முடியும்.

And I--I say this with reverence. My choice is to be a poor man. I could've been a multi-millionaire if I had wanted to be.

Rev. William Branham

செய்தி: சுயசரிதை, 53-1108A

# பணம்



2

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து